# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 02 | Issue: 9 | 4 Pages | 9.8.2024 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 9 | 4 பக்கங்கள் | 9.8.2024 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


# முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் வரும் 13ம் தேதி அமைச்சரவை கூட்டம்




சென்னை, ஆக. 9

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் வருகிற 13ம் தேதி தமிழக அமைச்சரவை கூட்டம் நடைபெறுகிறது. முதல்வர் மு.க.ஸ்டாலின் தொழில் முதலீடுகளை ஈர்க்க வருகிற 27ம் தேதி அமெரிக்க செல்ல திட்டமிட்டுள்ளார். சுமார் 10 நாட்கள் அமெரிக்காவில் தங்கி இருக்கும் முதல்வர், பல்வேறு தொழிலதிபர்களை சந்தித்து தமிழகத்தில் தொழில் தொடங்க வருமாறு அழைப்பு விடுக்கிறார். அமெரிக்காவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கூகுள் நிறுவன செயல் அதிகாரி உட்பட பல்வேறு தொழில் அதிபர்களை சந்திப்பதோடு அமெரிக்கா வாழ் தமிழர்களையும் சந்திக்க திட்டமிட்டுள்ளார். இந்த நிலையில் வருகிற 13ம் தேதி காலை 11 மணிக்கு சென்னை, தலைமை செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தமிழக அமைச்சரவை கூட்டம் நடைபெறுகிறது.

இந்த கூட்டத்தில் பங்கேற்க அனைத்து அமைச்சர்களுக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. முதல்வர் மு.க.ஸ்டாலின் அமெரிக்கா செல்ல உள்ள நிலையில் 13ம் தேதி நடைபெறும் அமைச்சரவை கூட்டம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

இந்த கூட்டத்தில், தமிழகத்தில் புதிதாக தொழில் தொடங்க வரும் அமெரிக்க நிறுவனங்கள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் குறித்து விவாதிக்கப்பட்டு முடிவு எடுக்கப் படவுள்ளது. மேலும், தமிழகத்தில் புதிதாக தொடங்கப்பட உள்ள வளர்ச்சி திட்டங்கள், தற்போது நடைபெற்று வரும் பணிகளை வேகப்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்தும் விவாதிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## தமிழக சாலைத் திட்டங்களுக்கு ரூ.5 ஆயிரம் கோடி ஒதுக்க தயார் நிதின் கட்கரி



புதுடெல்லி, ஆக. 9

மாநிலங்களவையின் திமுக எம்.பியான ராஜேஷ்குமார் கேள்வி நேரத்தில் பேசுகையில், 2023 மற்றும் 2024 ஆண்டுக்கானதிட்டத்தின்கீழ்தமிழகத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியானது ரூ.657.53 கோடி இது தமிழ்நாட்டுக்கு போதுமான நிதி இல்லை. எனவே, தமிழகத்துக்கு அனுமதிக்கப்பட்ட தொகையாக சுமார் ரூ.2000 கோடியை நடப்பு நிதி ஆண்டில் எந்த குறையும், காலதாமதமும் இல்லாமல் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று தெரிவித்தார்.

இதற்கு பதிலளிக்கும் வகையில் பேசிய மத்திய நெடுஞ்சாலைத்துறை மந்திரி நிதின் கட்கரி, "தமிழக நெடுஞ்சாலைத்துறைக்கு நிதி வழங்குவதில் நாங்கள் எந்தவித வரையறையும் வைத்திருக்கவில்லை. இரண்டாயிரம் கோடி ரூபாய் அல்ல, ரூ.5 ஆயிரம் கோடியை கூட ஒதுக்கநாங்கள்தயாராக இருக்கிறோம். ஏற்கெனவேஇதுகுறித்துநாங்கள்பல்வேறுமுடிவுகளையும்மேற்கொண்டு உள்ளோம். இருப்பினும் இதுதொடர்பாக நீங்கள் அதற்கான பரிந்துரையையும் , நிலம் கையகப்படுத்துதலையும் உறுதி செய்ய வேண்டும். இதையடுத்து அதுதொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும்மத்தியஅரசும்மேற்கொள்ளும்."என்றுதெரிவித்தார்.

## வினேஷ் போகத் 140 கோடி மக்களின் இதயங்களில் சாம்பியனாக இருக்கிறார் ஜனாதிபதி திரவுபதி முர்மு



புதுடெல்லி, ஆக. 9

ஒலிம்பிக் மல்யுத்தத்தில் இறுதிப்போட்டிக்கு முன்னேறி நாட்டிற்கு பெருமை சேர்த்த வினேஷ் போகத், தற்போது 100 கிராம் எடை கூடுதலாக இருக்கும் காரணத்தை சுட்டிக்காட்டி தகுதிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். வினேஷ் போகத் தகுதி நீக்கம் செய்யப்பட்டதால் மல்யுத்தத்தில் இந்தியாவிற்கான பதக்கம் தற்போது பறிபோயுள்ளது. இதனால் இந்திய ரசிகர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். பதக்கத்தை பறிகொடுத்த வினேஷ் போகத்துக்கு அனைவரும் தற்போது ஆறுதல் தெரிவித்து வருகின்றனர்.

அந்த வகையில் வினேஷ் போகத்துக்கு ஆறுதல் தெரிவித்துள்ள ஜனாதிபதி திரவுபதி முர்மு 140 கோடி மக்களின் இதயங்களில் அவர் சாம்பியனாக இருக்கிறார் என்று கூறியுள்ளார். இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

பாரீஸ் ஒலிம்பிக்கில் வினேஷ் போகத்தின் அசாதாரண சாதனைகள் ஒவ்வொரு இந்தியரையும் பரவசப்படுத்தியது மற்றும் நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ளது. தகுதி நீக்கம் குறித்த அவரது ஏமாற்றத்தை நாம் அனைவரும் பகிர்ந்து கொண்டாலும், அவர் 140 கோடி மக்களின் இதயங்களில் ஒரு சாம்பியனாக இருக்கிறார்.

இந்தியப் பெண்களின் உண்மையான சளைக்காத ஆற்றலை வினேஷ் போகத் வெளிப்படுத்தியிருக்கிறார்; அவரது மன உறுதியும், மீளும் திறனும் இந்தியாவில் இருந்து உருவாகும் வருங்கால உலக சாம்பியன்களை ஊக்குவித்து வருகிறது. எதிர்காலத்தில் அவருக்கு பல விருதுகள் கிடைக்க வாழ்த்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## மாற்று மத நபரை காதலித்ததால் ஆத்திரம்: தங்கையை கழுத்தை நெரித்து கொன்ற இளைஞர்

லக்னோ, ஆக. 9

உத்தரபிரதேச மாநிலம் மீரட் பகுதியை சேர்ந்த இளைஞர் ஹசன் (வயது 26). இவரது தங்கை அதேபகுதியை சேர்ந்த மாற்று மத நபரை காதலித்துள்ளார்.இருவரின்காதலுக்குஹசன்மற்றும்அவரதுகுடும்பத்தினர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

ஆனால் எதிர்ப்பையும் மீறி இருவரும் காதலித்த நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன் ஹசனின் தங்கையும் அவரின் காதலனும் வீட்டை விட்டு ஓடியுள்ளனர். ஆனால், ஹசனின் குடும்பத்தினர் காதலுடன் ஓடிச்சென்ற இளம்ப்பெண்ணைமீட்டுவீட்டிற்குஅழைத்துவந்துள்ளனர்.அதேவேளை, இளம்பெண்ணின் காதலனை போலீசார் கடத்தல் வழக்கில் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்நிலையில், தனது தங்கைக்கு வேறு ஒரு நபருடன் திருமணம் செய்துவைக்க ஹசன் மற்றும் அவரது குடும்பத்தினர் முயற்சித்துள்ளனர். ஆனால், திருமணத்திற்கு இளம்பெண் மறுப்பு தெரிவித்து வந்துள்ளார்.

திருமணம் தொடர்பாக ஹசனுக்கும் அவரது சகோதரிக்கும் இடையே நேற்று மீண்டும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. வாக்குவாதம் முற்றிய நிலையில் தங்கையை ஹசன் கழுத்தை நெரித்து கொலை செய்துள்ளார். இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்த போலீசார் ஹசனை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

## உ.பி.யில் மனைவியை தாக்கி, காதை அறுத்த கணவர் கைது

லக்னோ, ஆக. 9

உத்தர பிரதேச மாநிலம் பஹ்ரைக் மாவட்டத்தைச் சேர்ந்தவர் ஸ்ரீதேவி. இவர் பட்காவ்லி கிராமத்தின் தலைவராக உள்ளார். இவரது கணவர் பல்ராம் மீது சுமார் 14 வழக்குகள் உள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் பல்ராம் தனது மனைவி ஸ்ரீதேவியுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார். அப்போது திடீரென ஸ்ரீதேவியை தாக்கிய அவர், அரிவாளால் அவரது காதை அறுத்துள்ளார். தொடர்ந்து அவரை ஒரு அறையில் வைத்து பூட்டியுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக நேற்று ஸ்ரீதேவி காவல்நிலையத்தில் புகார் அளித்தார். இந்த புகாரின் அடிப்படையில் பல்ராமை கைது செய்த போலீசார், அவர் மீது கொலை முயற்சி உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

## அரசு உத்தரவின்படி வணிக நிறுவனங்களில் தமிழில் பெயர் பலகை இடம் பெற வேண்டும்: அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வலியுறுத்தல்



சென்னை, ஆக. 9

தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சி துறை வாயிலாக, 20222023ம் ஆண்டிற்கு தேர்வு செய்யபப்பட்ட அகவை முதிர்ந்த 100 தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை பெறுவதற்கான அரசாணைகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று சென்னை பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள ‘தந்தை பெரியார் கூட்ட அரங்கத்தில்’ வழங்கினார். இதனைத்தொடர்ந்து அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நிருபர்களிடம் கூறியதாவது: தேர்வு செய்யப்பட்டுள்ள 100 தமிழறிஞர்களுக்கு இந்த ஆண்டு மாத உதவித்தொகை 3500 ரூபாயும், 500 ரூபாய் மருத்துவப்படியும், தமிழ்நாடு முழுவதும் சென்று வருவதற்கு பேருந்தில் கட்டணமில்லா பயணத்திற்கான உத்தரவும் வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் 3ம் தேதி செம்மொழி நாளாக கொண்டாடப்படும். வணிக நிறுவனங்களில் தமிழில் பெயர் பலகை இருக்க வேண்டும். குறிப்பாக எந்த மொழியில் இருந்தாலும் தமிழ் மொழியில் பெரிய அளவில் இடம் பெற்றிருக்க வேண்டும் என்ற உத்தரவு இருக்கிறது. மேலும் அதற்கான அபராத தொகையும் அதிகப்படுத்தப்பட்டுள்ளது. அரசின் உத்தரவை நடைமுறைப்படுத்தாவர்களுக்கு அபராதம் விதிக்க அரசு தயங்காது. இவ்வாறு அவர் கூறினார். நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் ராஜாராமன், தமிழ் வளர்ச்சி துறை இயக்குநர் அவ்வை அருள், துணை இயக்குநர் சத்தியபிரியா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## கலவரத்தை காரணம் காட்டி இங்கிலாந்து பயணம் ரத்து? ஆதரவாளர் மூலம் நாடகமாடும் அண்ணாமலையின் மறைமுக திட்டம்

சென்னை, ஆக. 9

அண்ணாமலை தனது பயணத்தை ரத்து செய்ய திட்டமிட்டு, தனது ஆதரவாளர்மூலம்வேண்டுகோள்விடுக்க வைத்துள்ளதாக பரபரப்பு தகவல்கள் வெளியாகியுள்ளன. கடந்த மக்களவை தேர்தலில் தமிழகத்தில் பாஜ தலைமையில் தனி அணி அமைத்துப் போட்டியிட்டது. ஆனால் படுதோல்வி அடைந்தது. தேர்தல் தோல்விக்கு பொறுப்பேற்று அண்ணாமலை டெல்லி சென்று தனது ராஜினாமா கடிதத்தை கொடுத்தார். கடிதம் வாங்க மாட்டார்கள் என் நினைத்தார். ஆனால் அகில இந்திய தலைவர் நட்டா வாங்கிக் கொண்டதால் அதிர்ச்சி அடைந்தார். தன்னை மேலிடம் நீக்கிவிடும் என்பதை தெரிந்து கொண்ட அண்ணாமலை, கடந்த வாரம் டெல்லி சென்று பிரதமர் மோடி, உள்துறைஅமைச்சர்அமித்ஷா ஆகியோரை சந்திக்க விரும்பினார். ஆனால் அவர்கள் சந்திக்க மறுத்து விட்டனர். உடனே நட்டாவிடம் சென்று இங்கிலாந்துக்கு படிப்புக்கு செல்வது குறித்து பேசியுள்ளார். அப்போது வெளிநாட்டில் இருந்தபடியே கட்சியை கவனித்துக் கொள்கிறேன் என்று கேட்டிருக்கிறார். அதற்கு நட்டா பிடிகொடுக்கவில்லை. என்ன முடிவு எடுக்க வேண்டும் என்று எங்களுக்கு தெரியும் என்று கூறிவிட்டார். டெல்லி மேலிடம் அவரது பதவியை பறிப்பதிலேயே குறியாக உள்ளதாக கூறப்படுகிறது. இதற்கிடையில், மூன்று சிறுமிகள் கத்தியால் குத்தி கொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்து, இங்கிலாந்தின் பல பகுதிகளில் போராட்டம், கலவரம் நடந்து வருகிறது. வன்முறை சம்பவங்களும் நடந்து வருகின்றன. இதனால், இந்தியர்கள் கவனத்துடன் இருக்குமாறு லண்டனில் இருக்கும் இந்தியத் தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

இந்த அறிக்கையை தனது டிவிட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ள அண்ணாமலையின் தீவிர ஆதரவாளரான அமர்பிரசாத் ரெட்டி, ‘இங்கிலாந்துக்கு பயணம் செய்வது தற்போது உள்ள நிலையில் பாதுகாப்பானதாக இல்லை’ என்று கூறியுள்ளார். இதன் மூலம் அண்ணாமலை தனது பயணத்தை ரத்து செய்ய வேண்டும் என்பதை மறைமுகமாக கூறியுள்ளதாக கூறப்படுகிறது. அதாவது அண்ணாமலையே, அமர்பிரசாத் ரெட்டியை அழைத்து இந்த டிவிட்டர் செய்தியை வெளியிட வைத்திருக்கலாம் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. பின்னர் தனது பயணத்தை பாதுகாப்பு காரணம் காட்டி ரத்து செய்து விட்டால், தமிழகத்தில் தனது பதவியை தக்க வைத்துக் கொள்ளலாம் என்று கருதுவதாகவும் கூறப்படுகிறது. இதனால் தற்போது அண்ணாமலை பயங்கர குழப்பத்தில் ஆழ்ந்திருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## கடந்த 8 மாதங்களில் ரூ.13.16 கோடி அபராதம் விதிப்பு: கல்வி நிறுவனங்கள் அருகே புகையிலை விற்பனையை ஒழிக்கும் வகையில் 391 கூட்டுக் குழுக்கள்; உணவு பாதுகாப்புத் துறை அதிகாரிகள் நடவடிக்கை; டிஜிபி சங்கர் ஜிவால் தகவல்



சென்னை, ஆக. 9

தமிழ்நாட்டில் கல்வி நிறுவனங்கள் அருகே புகையிலை விற்பனையை ஒழிக்கும் வகையில் 391 கூட்டுக் குழுக்கள் உருவாக்கப்பட்டு உணவு பாதுகாப்புத் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என்றும், கடந்த 8 மாதங்களில் ரூ.13.16 கோடி அபராதம் விதிக்கப்பட்டுள்ளது என்றும் டிஜிபி சங்கர் ஜிவால் தெரிவித்துள்ளார். புகையிலைப் பொருட்களின் பயன்பாட்டினால் ஏற்படும் தீவிர உடல் நல பாதிப்புகளை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசானது, உணவு பாதுகாப்பு மற்றும் தரச் சட்டத்தின்படி, குட்கா, பான்மசாலா உள்ளிட்ட புகையிலைப் பொருட்களின் விற்பனைக்கு தடை விதித்தது.

புகையிலை பொருட்களின் விற்பனைக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்குமாறும் முதல்வர் உத்தரவிட்டார். இதைத் தொடர்ந்து 2023ம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் உணவு பாதுகாப்புத் துறை அதிகாரிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்பினருடன் இணைந்து தங்களது பகுதிகளில் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் விற்பனைக்கு எதிராக தீவிர சோதனைகளை நடத்தி, விற்பனையில் ஈடுபடும் கடைகளுக்கு அபராதமும் விதித்து சீல் வைக்கும் நடவடிக்கைகள் மேற்கொண்டனர். கடந்த 2023ம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் கடந்த 8 மாதங்களில் 1,76,699 கிலோ தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன், தவறிழைத்தவர்கள் மீது 19,332 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதுதவிர காவல் துறையினர் நடவடிக்கையினால் மட்டும் இதுவரை உணவு பாதுகாப்புத் துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக தவறிழைத்தவர்களுக்கு 13,16,24,700 அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. மேலும் 8,658 கடைகளுக்கும் சீல் வைக்கப்பட்டது. பறிமுதல் செய்யப்பட்ட 99,530 கிலோ குட்கா, உணவு பாதுகாப்புத் துறையினரால் அழிக்கப்பட்டுள்ளது. மேலும் கல்வி நிறுவனங்கள் அருகில் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் விற்பனையை ஒழிக்கும் ஒரு புதிய யுக்தியாக, உணவு பாதுகாப்புத் துறை மற்றும் காவல் துறையினரை கொண்டு 391 கூட்டுக் குழுக்கள் உருவாக்கப்பட்டு புகையிலைப் பொருட்கள் விற்பனை தொடர்பாக கடைகளில் திடீர் சோதனைகள் நடத்தப்படுகின்றன.

இந்தக் கூட்டுக் குழுக்களின் செயல்பாடுகள் சுகாதாரத் துறை கூடுதல் தலைமை செயலாளரால் 2 வாரங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படுகின்றன. காவல்துறையினரின் கடும் நடவடிக்கைகள், உணவு பாதுகாப்புத் துறையினருடன் இணைந்து மேற்கொள்ளும் சோதனைகள், கடைகளுக்கு சீல் வைத்தல், ரூ.25 ஆயிரத்துக்கும் அதிகமாக கடும் அபராதம் விதித்தல் போன்ற நடவடிக்கைகள், கல்வி நிறுவனங்கள் அருகில் புகையிலைப் பொருட்கள் விற்பனையை தடுப்பதில் நல்ல பலனை தந்துள்ளது. கல்வி நிறுவனங்கள் அருகில் விற்பனையை முற்றிலுமாக ஒழிக்கும் நோக்கத்தில் இந்த கூட்டு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் டிஜிபி சங்கர் ஜிவால் தெரிவித்துள்ளார்.

# சுதந்திர தினத்தில் விண்ணில் பாயும் புவி கண்காணிப்பு செயற்கைக்கோள் இஓஎஸ்8

சென்னை, ஆக. 9

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ புவி கண்காணிப்பு செயற்கைக்கோளான இஓஎஸ்8 செயற்கைக்கோளை எஸ்எஸ்எல்விடி3 சிறிய செயற்கைக்கோள் ஏவுதல் வாகனம் மூலம் ஆக.15ம் தேதி சுதந்திர தினத்தன்று ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள ஹரிகோட்டாவில் இருந்து ஏவப்படும் என தெரிவித்துள்ளது. இதுகுறித்து இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறியதாவது: இஓஎஸ்8 செயற்கைக்கோளின் முதன்மை நோக்கம், மைக்ரோ சாட்லைட்டை வடிவமைத்தல் மற்றும் உருவாக்குதல், மைக்ரோ



சாட்லைட் பஸ்ஸுடன் இணக்கமான பேலோட் கருவிகளை உருவாக்குதல் மற்றும் எதிர்காலத்தில் செயல்படும் செயற்கைக்கோள்களுக்கு தேவையான புதிய தொழில்நுட்பங்களை இணைத்தல் ஆகியவை அடங்கும்.

இஓஎஸ்8 செயற்கைக்கோள் எலக்ட்ரோ ஆப்டிகல் இன்ஃப்ராரெட் பேலோடு (இஓஐஆர்), குளோபல் நேவிகேஷன் சாட்டிலைட் சிஸ்டம் ரிஃப்ளெக்டோமெட்ரி பேலோட் (ஜிஎன்எஸ்எஸ் ஆர்) மற்றும் எஸ்ஐசி யுவி டோசிமீட்டர் ஆகிய மூன்று பேலோடுகளைக் கொண்டுள்ளது. இஓஐஆர் கருவி, செயற்கைக்கோள் அடிப்படையிலான கண்காணிப்பு, பேரிடர் கண்காணிப்பு, சுற்றுச்சூழல் கண்காணிப்பு, இரவும் பகலும், மிட்வேவ் ஐஆர் (எம்ஐஆர்) மற்றும் லாங்வேவ் ஐஆர் (எல்விஐஆர்) பேண்டுகளில் படங்களை எடுக்க வடிவமைக்கப்பட்டுள்ளது. எரிமலை செயல்பாடு கண்காணிப்பு மற்றும் தொழில்துறை மற்றும் மின் நிலைய பேரிடர் கண்காணிப்பு ஆகியவை இந்த கருவியின் செயல்பாடாகும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# கமாண்டோ பயிற்சியில் போலீஸ்காரர் மயங்கி சாவு



தூத்துக்குடி, ஆக. 9

தென்காசி மாவட்டம் திருவேங்கடம் அருகே குலசேகரகோட்டையை சேர்ந்தவர் பசுபதி மாரி (28). இவர் தமிழக காவல் துறையில் 2017ம் ஆண்டு 2ம் நிலை காவலராக பணியில் சேர்ந்தார். அதைத் தொடர்ந்து நெல்லை மாவட்ட ஆயுதப்படை பிரிவில் பணிபுரிந்து வந்தார். இந்நிலையில் தூத்துக்குடி மாவட்டம், வல்லநாடு துப்பாக்கி சுடும் தளத்தில் நடக்கும் கமோண்டோ பயிற்சிக்கு பசுபதி மாரி சென்றிருந்தார்.

பயிற்சியின் போது திடீரென்று அவர் மயங்கி விழுந்தார். உடன் வந்த போலீசார் அவரை மீட்டு, நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவர் நேற்றிரவு பரிதாபமாக இறந்தார். பசுபதி மாரிக்கு 2 ஆண்டுகளுக்கு முன்புதான் திருமணம் நடந்தது. தற்போது மனைவி கர்ப்பமாக உள்ளார்.

# வர்ணாசிரம கொள்கையை கடைபிடிக்கவே சாதிவாரி கணக்கெடுப்புக்கு ஒன்றிய பாஜ அரசு மறுப்பு: கே.பாலகிருஷ்ணன் குற்றச்சாட்டு

தர்மபுரி, ஆக. 9

வர்ணாசிரம கொள்கையை கடைபிடிக்கவே, பாஜ அரசு சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த மறுக்கிறது என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் தெரிவித்தார். தர்மபுரிக்கு நேற்று வந்த கே.பாலகிருஷ்ணன் அளித்த பேட்டி: மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது அகில இந்திய மாநாடு, அடுத்த ஆண்டு ஏப்ரல் 2 முதல் 6 வரை மதுரையில் நடைபெற உள்ளது. இம்மாநாட்டில் கேரள முதல்வர் உள்பட இந்தியா முழுவதும் 700 பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர். அதே போல், மாநில மாநாடு ஜனவரி 3,4,5 ஆகிய தேதிகளில் விழுப்புரத்தில் நடக்கிறது.



இந்தியாவில் 2021ல் நடத்திய சாதிவாரியான கணக்கெடுப்பை, பாஜ அரசு வெளியிடவில்லை. வர்ணாசிரம கொள்கையை கடைபிடிப்பதால் தான், பாஜ அரசு சாதிவாரி கணக்கெடுப்பை நடத்த மறுக்கிறது. ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பில் உரிய இடம் கொடுக்க, சாதிவாரி கணக்கெடுப்புநடத்த வேண்டும்.

ஆணவ படுகொலைகளை தடுக்க தமிழக அரசு சட்டம் இயற்றவேண்டும். பாஜவை சேர்ந்த ராமலிங்கம், தமிழகத்தை 3 ஆக பிரித்தால்தான் ஒன்றிய அரசு நிதி வழங்கும் என்ற கருத்தை தெரிவித்துள்ளார். இது கண்டிக்கத்தக்கது. இவ்வாறு அவர் கூறினார்.

# இலங்கையில் இருந்து கடத்தல்: நடுக்கடலில் வீசப்பட்ட ரூ.3.30 கோடி தங்கம் பறிமுதல்

ராமேஸ்வரம், ஆக. 9

இலங்கையில் இருந்து தமிழகத்திற்கு கடத்த முயன்று நடுக்கடலில் வீசப்பட்ட ரூ.3.30 கோடி மதிப்புள்ள தங்கக்கட்டிகளை இலங்கை கடற்படையினர் கைப்பற்றினர். இலங்கையில் புத்தளம் மாவட்டம் கல்பிட்டி அருகே மன்னார் வளைகுடா கடற்பகுதியில், அந்நாட்டு கடற்படையினர் நேற்று முன்தினம் ரோந்துப்பணியில் ஈடுபட்டனர். அப்போது ஒரு படகை துரத்திச் சென்றபோது, படகில் இருந்தவர்கள், ஒரு பார்சலை கடலுக்குள் போட்டு விட்டு



தப்பிச் சென்றனர். கடற்படையில் உள்ள நீச்சல் வீரர்கள் நீண்ட நேரம் தேடி பார்சலை எடுத்தனர்.

அதனை சோதனை செய்தபோது அதில் 4 கிலோ 740 கிராம் தங்கக்கட்டிகள் இருந்தன. இதன் சர்வதேச மதிப்பு ரூ.3 கோடியே 30 லட்சம் ஆகும். விசாரணையில் கடத்தல் தங்கம் ராமநாதபுரம் மாவட்ட கடலோர பகுதிக்கு கடத்த முயன்றது தெரிய வந்தது. மேலும் கடத்தலுக்கு பயன்பட்ட பைபர்படகை கடற்படையினர் பறிமுதல் செய்துள்ளனர். கைப்பற்றிய கடத்தல் தங்கக்கட்டிகளை சுங்கத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். தப்பி சென்ற கடத்தல்காரர்களை இலங்கை கடற்படையினர் தீவிரமாக தேடி வருகின்றனர். ராமநாதபுரம் மாவட்டத்திற்கு தங்கம் யாருக்கு கடத்தி வரப்பட்டது என ஒன்றிய, மாநில புலனாய்வு பிரிவு போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# குமரியில் பெண் சார்பதிவாளர் கைதை தொடர்ந்து மேலும் ஒரு சார்பதிவாளர் கைதாகிறார்? ஊழியர்கள், புரோக்கர்களும் சிக்குகிறார்கள்

நாகர்கோவில், ஆக. 9

குமரியில் முறைகேடாக பத்திரப்பதிவு செய்த பெண் சார்பதிவாளர் கைது செய்யப்பட்டதை தொடர்ந்து மேலும் ஒரு சார்பதிவாளர் கைதாக வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது. குமரி மாவட்டம் தோவாளை சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராக இருப்பவர் மேகலிங்கம். இவர் கடந்த சில மாதங்களுக்கு முன் விடுமுறையில் சென்றார். இவருக்கு பதிலாக, நாகர்கோவில் இடலாக்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பொறுப்பு சார்பதிவாளராக இருந்த சுப்புலெட்சுமி (33) என்பவர், கூடுதல் பொறுப்பாக தோவாளைக்கும் சார்பதிவாளராக நியமிக்கப்பட்டார். அவர் ரகசிய லிங்க் வசதியை பயன்படுத்தி, மேகலிங்கம் பணியில் இருந்த அன்றைய தினத்திலேயே, அவர் நிறுத்திவைத்து இருந்த பத்திரங்களை அவசர, அவசரமாக பதிவு செய்ததாக கூறப்படுகிறது. இது குறித்து அறிந்ததும் மேகலிங்கம் அதிர்ச்சி அடைந்தார்.

இது பற்றி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுந்தரவதனத்திடம் புகார் அளித்தார். இது தொடர்பாக சைபர் கிரைம் போலீசார் விசாரணை நடத்தியதில், தோவாளை சார்பதிவாளர் பொறுப்பில் நியமிக்கப்பட்ட சுப்புலெட்சுமி, முறைகேடாக பத்திரங்களை பதிவு செய்தது தெரிய வந்தது. இதையடுத்து தனிப்படையினர் விசாரணை நடத்தி, சார்பதிவாளர் (பொறுப்பு) சுப்புலெட்சுமி, அவருக்கு உதவியதாக மாவட்ட பதிவாளர் அலுவலக உதவியாளர் தனராஜா (50), அலுவலக ஊழியர்கள் நம்பிராஜன், ஜெயின் ஷைலா, டெல்பின் ஆகிய 5 பேரை நேற்று முன்தினம் கைது செய்தனர். தொடர் விசாரணையில் மேலும் ஒரு சார்பதிவாளருக்கும் தொடர்பு உள்ளது தெரிய வந்துள்ளது. இவரும்



இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார். அவரும் விரைவில் கைது செய்யப்படலாம் என கூறப்படுகிறது. மோசடி குறித்து சைபர் கிரைம் போலீஸ் தரப்பில் கூறுகையில், 'ஒவ்வொரு சார்பதிவாளருக்கும் தனித்தனி ரகசிய குறியீட்டு எண் இருக்கும். அவர்கள் அந்த குறியீட்டு எண்மூலமேலிங்க் ஓபன் செய்து பத்திரங்களை பதிவு செய்ய முடியும்.

மற்றொரு அலுவலகத்துக்கு பொறுப்பு சார்பதிவாளராக நியமிக்கப்பட்டால், அந்த அலுவலகத்துக்கு உட்பட்ட பத்திர ஆவணங்களையும் இந்த லிங்க் மூலம் சம்பந்தப்பட்ட அதிகாரி பார்ப்பதற்கான வசதி மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் இருந்து தான் ஏற்பாடு செய்யப்படும். அதன்படி இடலாக்குடியில் பணியில் இருந்த சுப்புலெட்சுமி, தோவாளை சார்பதிவாளராக நியமிக்கப்பட்டதும், தோவாளை சார்பதிவாளர் அலுவலகத்துக்கான ஆவணங்களை பார்ப்பதற்கான ஆன்லைன் லிங்க் அவருக்கு வழங்கப்பட்டது. அவர் தனது ரகசிய குறியீட்டு எண்ணை பயன்படுத்தி அதை பார்த்து உள்ளார். அப்போது தான் நிலுவையில் இருந்த பத்திரங்களை, மேகலிங்கம் பணியில் இருந்த நாளில் பதிவு செய்தது போல் பதிவு செய்துள்ளனர். இதில் யார், யாருக்கு தொடர்பு உள்ளது என்பது குறித்து விசாரித்து வருகிறோம். புரோக்கர்கள், அலுவலக ஊழியர்கள் தொடர்பான பட்டியல் தயாரிக்கப்பட்டு விசாரணை நடக்கிறது என்றனர்.

# திருமணமான நான்கே மாதத்தில் மனைவியை நிர்வாண படம் எடுத்து பாலியல் தொழிலில் தள்ளிய கணவன்: புகைப்படங்களை பலருக்கு விற்றதால் தற்கொலை முயற்சி

ஆத்தூர், ஆக. 9

சேலம் மாவட்டம், ஆத்தூர் அருகே ஒரு பகுதியைச் சேர்ந்த 21 வயது இளம்பெண்ணுக்கும், சேலம் மாவட்டத்தை சேர்ந் 28 வயது வாலிபருக்கும் கடந்த 4 மாதத்துக்கு முன் திருமணம் நடந்தது. கடந்த 3ம்தேதி, ஆடிப்பெருக்கு விழாவுக்காக தாய் வீட்டிற்கு வந்த இளம் பெண் மறுநாள் மாலை, எலி பேஸ்ட்டை தின்று தற்கொலைக்கு முயன்றுள்ளார். பெற்றோர் அவரை மீட்டு ஆத்தூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவருக்குதீவிரசிகிச்சைஅளிக்கப்பட்டு வருகிறது. இது குறித்து ஆத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார், இளம்பெண்ணிடம் விசாரணை நடத்தினர். அப்போது, கண்ணீருடன் அவர் அளித்த வாக்குமூலத்தில் கூறியதாவது: எனக்கு 4 மாதங்களுக்கு முன்பு திருமணம் நடந்தது. திருமணத்திற்கு பிறகு நாங்கள் தனிமையில் உல்லாசமாக இருந்தபோது, எனக்குத் தெரியாமல் எனது நிர்வாண புகைப்படங்களை கணவர் செல்போனில் எடுத்துள்ளார். இதையறிந்த நான் அவரது செல்போனை வாங்கி பார்த்த போது, அவருடன் நெருங்கி பழகும் பல பெண்களின் நிர்வாண புகைப்படங்களையும் அதில் வைத்திருந்தார். மேலும், அந்த புகைப்படங்களை தனக்கு தெரிந்த பல ஆண்களிடம் விலைக்கு விற்றதும் தெரியவந்தது. இதனை தட்டிக் கேட்ட என்னை, அவர் அடித்து துன்புறுத்தினார். மேலும், பல ஆண்களை வீட்டிற்கு அழைத்து வந்து, பகலிலேயே அவர்களுடன் உறவு வைத்துக் கொள்ளசொல்லி, அடித்து கொடுமைப்படுத்தினார். இந்நிலையில், ஆடிப் பண்டிகைக்கு வீட்டிற்கு வந்த போது, என்னுடைய செல்போனை எடுத்து பார்த்த எனது அத்தை அதில் இருந்த ஆபாச படங்களை கண்டு அதிர்ச்சி அடைந்தார். இது குறித்து என்னிடம் கேட்ட போது, நடந்த சம்பவங்களை அவரிடம் தெரிவித்தேன். அவர் எனது பெற்றோரிடம் கூறியதால் வீட்டில் தகராறு ஏற்பட்டது. இது தெருவில் உள்ளவர்களுக்கும் தெரிந்து விட்டதால், அவமானமடைந்த நான் எலி பேஸ்ட் தின்று தற்கொலைக்கு முயன்றேன். ஆனால் பெற்றோர் என்னை மீட்டு, மருத்துவமனையில் சேர்த்து காப்பாற்றி விட்டனர். இவ்வாறு அவர் வாக்குமூலம் அளித்ததாக போலீசார் தெரிவித்தனர். இதையடுத்து மகளிர் போலீசார், பெண்ணின் கணவர் மீது 6 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இதனிடையே, பெண்ணின் கணவர் ஆத்தூர் டவுன் போலீசில் அளித்த புகாரில், கடந்த 5ம்தேதி மாமனார் வீட்டிற்கு தான் வந்தபோது மனைவியின் தாய் மற்றும் அத்தை சண்டை போட்டனர். இதை தட்டிக் கேட்ட போது, மாமனார், மாமியார், உறவினர்கள் தன்னை தாக்கியதாக தெரிவித்துள்ளார். அதன் பேரிலும் போலீசார் வழக்குபதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# எம்.ஆர்.விஜயபாஸ்கர் சிறை விவகாரம்: காவலர் சஸ்பெண்ட்

திருச்சி, ஆக. 9

ரூ.100 கோடி நில அபகரிப்பு மற்றும் கொலை மிரட்டல் புகாரில் அதிமுக முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் கடந்த மாதம் 16ம் தேதி சிபிசிஐடி போலீசாரால் கைது செய்யப்பட்டு திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். கடந்த 31ம் தேதி ஜாமீனில் விடுவிக்கப்பட்டார். அவரை வரவேற்பதற்காக திருச்சி மத்திய சிறை வளாக வாசலில் அதிமுக நிர்வாகிகள், தொண்டர்கள் குவிந்தனர். இது தொடர்பாக சிறைத்துறை ஏடிஜிபி மகேஸ்வர் தயாள் உத்தரவின்பேரில்திருச்சி சிறைத்துறை டிஐஜி (பொ) பழனி விசாரணை நடத்தி, சிறை வளாகத்துக்குள் யாரையும் அனுமதிக்க கூடாது என்ற விதியை கடைபிடிக்காத சிறைக்காவலர் கணேஷ் குமாரை சஸ்பெண்ட் செய்து உத்தரவிட்டார். மேலும் சிறை காவலர்கள் காளிமுத்து, சக்திவேல், அசாருதீன் ஆகியோருக்கு மெமோ கொடுக்கப்பட்டது.

# ஆற்றில் மூழ்கி 3 சிறுவர்கள் பலி

திண்டிவனம், ஆக. 9

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அருகே கோனேரிக்குப்பத்தை சேர்ந்தவர் விஜயகுமார், கொத்தனார். இவரது மகன் சஞ்சய் (10). அப்பகுதியை சேர்ந்த கூலி தொழிலாளி மாரிமுத்துவின் மகள்கள் பிரியதர்ஷினி (10) சுபாஷினி (8). இவர்கள் 3 பேரும் கோனேரிக்குப்பம் அரசு நடுநிலைப் பள்ளியில் முறையே 5, 6, 3ம் வகுப்பு படித்து வந்தனர். இந்நிலையில் நேற்று பள்ளி முடிந்ததும் நல்லாத்தூரிலிருந்து ஓங்கூர் செல்லும் ஆற்றங்கரையில் உள்ள நாவல் மரத்தில் நாவற்பழம் பறிக்க சென்றுள்ளனர். சுற்று வட்டார பகுதியில் பெய்து வரும் கனமழையால் ஆற்றில் நீர் அதிகளவில் செல்லும் நிலையில், நாவற்பழம் பறிக்கும்போது எதிர்பாராத விதமாக மூவரும் நீரில் மூழ்கினர். அப்போது அவ்வழியாக சென்ற ஒருவர் பார்த்தபோது பள்ளி சீருடை மட்டும் நீரில் மேலே தெரிந்துள்ளது. அவர் கொடுத்த தகவலின்படி ஒலக்கூர் போலீசார் வந்து பார்த்தபோது 3 சிறுவர், சிறுமிகளும் நீரில் மூழ்கி உயிரிழந்தது தெரியவந்தது.


இதுகுறித்து ஒலக்கூர் போலீசார் வழக்குபதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ரயிலில் சிக்கி கணவன் இறந்த துக்கத்தில் தாய், மகள் விஷம் குடித்து தூக்குப்போட்டு தற்கொலை

ஜோலார்பேட்டை, ஆக. 9

ரயிலில் சிக்கி கணவன் இறந்த துக்கத்தில் இருந்த தாய், மகள் விஷம் குடித்து குடும்ப புகைப்படத்தை பார்த்தபடி தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டனர். திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டையில், சந்தை கோடியூர், பாதர் கேசு ரோடு பகுதியில் வாடகை வீட்டில் வசித்தவர் குகநாதன் மனைவி கற்பகம் (42). சில ஆண்டுகளுக்கு முன்பு பியூட்டி பார்லர் நடத்தியுள்ளார். இவரது கணவர் குகநாதன் எலக்ட்ரீசியன் வேலை செய்து வந்தார். கடந்த 2 மாதங்களுக்கு முன்பு ஜோலார்பேட்டை ரயில் நிலையத்தில் தண்டவாளத்தை கடக்க முயன்ற போது குகநாதன் ரயிலில் அடிபட்டு இறந்துள்ளார். இவர்களது மகள் சுபிக்ஷா (16) பிளஸ்2 முடித்துவிட்டு வீட்டிலிருந்து வந்தார். குகநாதன் இறந்ததிலிருந்தே கற்பகமும், சுபிக்ஷாவும் விரக்தியில் இருந்துள்ளனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இருவரும் அரளிவிதையை மிக்சியில் அரைத்து குடித்துள்ளனர். பின்னர் குகநாதன், கற்பகம், சுபிக்ஷா ஆகிய 3 பேரும் ஒன்றாக இருக்கும் புகைப்படத்தை எடுத்து மேசையின் மீது வைத்துவிட்டு அதை பார்த்தபடி,



மின்விசிறியில் ஆளுக்கு ஒரு இடத்தில் தூக்கு மாட்டி தற்கொலை செய்துள்ளனர். நேற்று முன்தினம் மதியம் முதல் வீடு திறக்காத நிலையில், சந்தேகமடைந்த அக்கம்பக்கத்தினர் ஜோலார்பேட்டை போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். போலீசார் இருவரின் உடல்களையும் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பாரில் உணவு சரியில்லை என வழக்கு வீட்டிலேயே மது அருந்தி உணவு தயாரித்து சாப்பிடலாம்: ஐகோர்ட் கிளை கருத்து

மதுரை, ஆக. 9

கன்னியாகுமரியை சேர்ந்த செஸ்டின்ராஜ், ஐகோர்ட் மதுரை கிளையில் தாக்கல் செய்த மனு: கன்னியாகுமரி பகுதியில் உள்ள டாஸ்மாக் கடையருகே உள்ள பாரில் மது அருந்த சென்றேன். பாரில் சிக்கன், முட்டை உள்ளிட்ட உணவுப்பொருளை சாப்பிட ஆர்டர் செய்தேன். அங்கு சிக்கன், முட்டை சரியில்லை. எனவே அந்த பாருக்கு உணவுப்பொருள் விற்க தடை விதிக்க உத்தரவிட வேண்டும். இவ்வாறு



மனுவில் கூறியிருந்தார். இந்த மனு நேற்று நீதிபதிகள் ஆர். சுப்பிரமணியன், எல். விக்டோரியகவுரி ஆகியோர் முன் விசாரணைக்கு வந்தது. மனுவை விசாரித்த நீதிபதிகள், உணவுப்பொருள் பிடிக்கவில்லை என்றால் மற்றொரு பாருக்கு சென்று பிடித்ததை வாங்கி சாப்பிடலாமே? அப்படியும் விரும்பவில்லை என்றால் மனுதாரர் வீட்டிலேயே மது அருந்திவிட்டு உணவுப்பொருட்களை தயாரித்து சாப்பிடலாம் எனக்கூறி மனுவை தள்ளுபடி செய்தனர்.

# கோவை, சிவகங்கை பத்திரப்பதிவு ஆபீஸ்களில் விஜிலென்ஸ் ரெய்டு: சார்பதிவாளர் காரில் ரூ.2.80 லட்சம் பறிமுதல்

சென்னை, ஆக. 9

கோவை அருகே பத்திரப்பதிவு அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு போலீசார் விடிய விடிய சோதனை நடத்தினர். அப்போது சார் பதிவாளர் காரில் இருந்த ரூ.2.80 லட்சத்தை பறிமுதல் செய்தனர். இதே போல சிவகங்கையில் நடந்த சோதனையில் ரூ.72,730 பறிமுதல் செய்யப்பட்டது. கோவை அடுத்த பெரியநாயக்கன் பாளையம் பத்திரப்பதிவு அலுவலகத்தில் லஞ்சம் வாங்குவதாக புகார் எழுந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு 9 மணி அளவில் பத்திரப்பதிவு அலுவலகத்துக்கு மாவட்ட லஞ்ச ஒழிப்பு போலீசார் அதிரடியாக சென்றனர். அப்போது சார் பதிவாளர் அருணா வாடகை காரில் ஏறி புறப்பட்டுள்ளார்.

அவரை தடுத்து நிறுத்திய அதிகாரிகள் காரில் சோதனை செய்தனர். அதில், கணக்கில் வராத ரூ.2.80 லட்சம் வைத்திருந்ததை கண்டுபிடித்து பறிமுதல் செய்தனர். தொடர்ந்து, அவரை அலுவலகத்துக்கு அழைத்து சென்று விசாரணை நடத்தினர். பணியாளர்களையும் வெளியே அனுப்பாமல் சோதனையில் ஈடுபட்டனர். இந்த சோதனை நேற்று காலை 7 மணி வரை நடைபெற்றது. சோதனையில் கணக்கில் வராத பல லட்சம் மதிப்பிலான பணம் மற்றும் முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாக கூறப்படுகிறது. சிவகங்கை அருகே மதகுபட்டியில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில் ஏராளமான முறைகேடுகள், கூடுதல் பண வசூல் குறித்து புகாரையடுத்து நேற்று மாலை சிவகங்கை லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் அங்கு அதிரடி சோதனை நடத்தினர்.

பல மணி நேரம் தொடர்ந்த சோதனையில் அலுவலர் ஒருவரிடம் ரூ.1,500ம், ஒரு அறையில் ரூ.71,230 கைப்பற்றப்பட்டது. சில ஆவணங்களையும் போலீசார் கைப்பற்றினர். இந்த சோதனை இரவு வரை தொடர்ந்தது. ரூ.1.2 லட்சம் பறிமுதல்: திருப்பூரில் ஊரக வளர்ச்சி உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு போலீசார் நேற்று நடத்திய சோதனையில் உதவி செயற்பொறியாளர் தர்மலிங்கம் (42) என்பவரிடமிருந்து ரூ.86 ஆயிரம், உதவி பொறியாளர் சிவராஜ் (58) என்பவரிடமிருந்து ரூ.16,300 என ரூ.1 லட்சத்து 2 ஆயிரத்து 300 ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டது.

# யானைகள் ஊருக்குள் நுழைவதை தடுக்க கூடலூர் வனப்பகுதியில் வனத்துறையினர் ஆய்வு




கூடலூர், ஆக.9

கூடலூர் பகுதியில் யானைகள் நுழைவதை தடுக்க வனப்பகுதி எல்லையில் வனத்துறையினர் கிராம மக்களுடன் இணைந்து ஆய்வு செய்து வருகின்றனர். நீலகிரி மாவட்டம் முதுமலை புலிகள் காப்பக வனப்பகுதியில் இருந்து வெளியே வரும் யானைகள் கூடலூரை அடுத்துள்ள ஸ்ரீ மதுரை ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் காலை மற்றும் இரவு நேரங்களில் புகுந்து விவசாய பயிர்களை சேதப்படுத்தி வருகிறது. யானைகள் நடமாட்டம் காரணமாக கிராம மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர். கிராமங்களை ஒட்டிய வன எல்லைகளான தொரப்பள்ளி முதல் போஸ்பாராவரை அமைக்கப்பட்டுள்ள அகழிகளை பல இடங்களில் யானைகள் சேதப்படுத்தி ஊருக்குள் புகுந்து வருகின்றன.

கடந்த சில ஆண்டுகளாக இந்த நிலை தொடர்ந்து வருவதால், அகழிகளை சீரமைத்து அப்பகுதியில் மின்வேலி அமைக்க வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். ஊருக்குள் வரும் காட்டு யானைகளை விரட்ட அவ்வப்போது கும்கி யானைகள் உதவியுடன் வனத்துறையினர் நடவடிக்கைகள் மேற்கொண்டு வந்தாலும் நிரந்தர தீர்வு கிடைக்கவில்லை.

இந்த நிலையில் கடந்த ஜூன் மாதம் அகழி தூர்வாரும் நடவடிக்கைகளை மேற்கொண்ட போது, மழை பெய்ததால், பணிகள் நிறுத்தப்பட்டன. தற்போது மழை ஓரளவு குறைந்துள்ளதால், மீண்டும் பணிகளை துவக்க வனத்துறையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். இதன் தொடர்ச்சியாக இன்று காலை முதல் வனத்துறையினர் மற்றும் கிராம மக்கள் அடங்கிய குழுவினர் வன எல்லையான குனில் வயல், ஏச்சம் வயல், அம்பல மூலா கிராமங்களை ஒட்டியுள்ள உள்ள அகழிகளில் சேதமடைந்த பகுதிகளை ஆய்வு செய்து, சேதமடைந்துள்ள பகுதிகளை பொக்லைன் இயந்திரம் மூலம் சீரமைக்கும் நடவடிக்கையில் வனக்குழுவினர் ஈடுபட்டுள்ளனர். இந்த ஆய்வு பணிகள் வனச்சரகர்கள் விஜய் மற்றும் ராதாகிருஷ்ணன் ஆகியோர் தலைமையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# வங்கதேசத்தில் தாக்குதலுக்கு உள்ளாகும் இந்துக்களை பாதுகாப்பது நம் பொறுப்பு: இந்தியா விரைந்து செயல்பட சத்குரு வலியுறுத்தல்



கோவை, ஆக. 9

வங்கதேசத்தில் இந்து மக்களுக்கு எதிராக நடக்கும் கொடுமைகள் குறித்து சத்குரு அவர்கள் எக்ஸ் தளத்தில் தனது கருத்தை பதிவிட்டுள்ளார். அதில் அவர் வங்கதேசத்தில் தாக்குதலுக்கு உள்ளாகும் இந்துக்களை பாதுகாப்பது நம் பொறுப்பு, இதில் நம் பாரத நாடு விரைந்து செயல்பட வேண்டும் என வலியுறுத்தி உள்ளார்.

சத்குருவின் எக்ஸ் பதிவில் "இந்துக்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகள் வங்கதேசத்தின் வெறும் உள்நாட்டுப் பிரச்சனை அல்ல. நம் அண்டை நாட்டிலுள்ள சிறுபான்மையினருக்காக நாம் உறுதியாக நின்று விரைந்து செயல்படாவிட்டால், பாரதம் மஹாபாரதமாக இருக்க முடியாது. இந்த நாட்டின் அங்கமாக இருந்தது, துரதிர்ஷ்ட வசமாக அண்டை நாடாகி விட்டது. ஆனால் நிஜத்தில் இந்த நாகரிகத்தைச் சேர்ந்த இம்மக்களை, இத்தகைய அதிர்ச்சியான கொடுமைகளிலிருந்து பாதுகாப்பது நம் பொறுப்பு" எனப் பதிவிட்டு உள்ளார்.

அவரின் இந்தப் பதிவில் வங்கதேசத்தில் இந்துக்களுக்கு எதிராக நடைபெறும் வன்முறை சம்பவங்கள் குறித்து அந்நாட்டில் வெளியாகும் 'த டைலி ஸ்டார் (The Daily Star)' என்ற ஆங்கில நாளிதழ் வெளியிட்டுள்ள செய்தியையும் பகிர்ந்து உள்ளார்.

மேலும் இது தொடர்பாக அவர் பகிர்ந்த மற்றொரு எக்ஸ் பதிவில் "நம் அண்டை நாட்டின் துரதிர்ஷ்டவசமான நிதர்சனம். மதத் தீவிரவாதம் நம் அன்பான பாரதத்தை ஒருபோதும் ஆட்டிப்படைக்காதவாறு நாம் உறுதி செய்வோம்" எனப் பதிவிட்டு உள்ளார்.

# வங்காளதேசத்தில் இந்துக்கள் தாக்கப்படுவது குறித்து 'இந்தியா' கூட்டணி மவுனம் சாதிக்கிறது வானதி சீனிவாசன்



சென்னை, ஆக. 9

வங்காளதேசத்தில் இந்துக்கள் தாக்கப்படுவது குறித்தும், அவர்களின் வழிபாட்டுத் தலங்கள் எரிக்கப்படுவது குறித்தும், காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட 'இந்தியா' கூட்டணி கட்சிகள் மவுனம் சாதிப்பதாக பா.ஜ.க. எம்.எல்.ஏ. வானதி சீனிவாசன் விமர்சித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;

"வங்காளதேச நாட்டில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி, பெரும் கலவரம் காரணமாக, அந்நாட்டின் பிரதமர் ஷேக்ஹசீனா பதவியை ராஜினாமா செய்து விட்டு, நாட்டை விட்டு வெளியேறியிருக்கிறார். அவர் தற்காலிகமாக இந்தியாவில் தங்க அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வங்காளதேசம் இன்று தனி நாடாக இருந்தாலும், 1947க்கு முன்பு வரை இந்தியாவின் ஒரு பகுதியாகவே இருந்தது. இந்தியாவை பிளவுபடுத்த நினைத்த ஆங்கிலேயர்கள், முதலில் வங்காளத்தை தத்தான் பிரித்தார்கள். அப்படி பிரிக்கப்பட்ட ஒரு பகுதியான மேற்கு வங்கம் நம்மிடம் உள்ளது. கிழக்கு வங்கம் பாகிஸ்தானோடு இணைக்கப்பட்டது. பின் அது வங்காளதேசம் என்ற தனி நாடானது.

பிரதமர்பதவியை ராஜினாமா செய்ததுடன் நாட்டை விட்டே ஷேக் ஹசீனா வெளியேறியிருக்கிறார்.

ஆனாலும், அங்கு கலவரங்கள் ஓயவில்லை. இப்போது அங்கு வசிக்கும் ஒரு கோடிக்கும் அதிகமான இந்துக்களை குறிவைத்து வன்முறை வெறியாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்து கோவில்கள், இந்துக்களின் சொத்துக்கள் சூறையாடப்படுகின்றன. பல்வேறு கோயில்கள் எரிக்கப்பட்டுள்ளன. இஸ்கான் கோயில் தாக்கப்பட்டு, அங்குள்ள 'பகவத் கீதை' உள்ளிட்ட புனித நூல்கள் எரிக்கப்பட்ட காட்சி கண்ணீரை வரவழைக்கிறது. வங்காளதேச நாட்டில் சிறுபான்மையினராக உள்ள இந்துக்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி இருக்கிறது.

இஸ்ரேல் பாலஸ்தீனம் போர் காரணமாக, பாலஸ்தீனத்தைச் சேர்ந்த முஸ்லிம்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்றதும், இந்தியாவில் உள்ள அரசியல் கட்சிகள் குறிப்பாக, தி.மு.க., காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகள் கண்டனக் குரல் எழுப்பினார்கள். ஆர்ப்பாட்டம், போராட்டம் என்று இன்று வரை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், வங்காளதேசத்தில் மண்ணின் மைந்தர்களான இந்துக்கள் தாக்கப்படுவது குறித்தும், அவர்களின் வழிபாட்டுத் தலங்கள் எரிக்கப்படுவது குறித்தும், காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட 'இந்தியா' கூட்டணி கட்சிகள் மவுனம் சாதிக்கின்றன.

இந்துக்களின் உயிரும் உடைமைகளும் அவர்களுக்கு ஒரு பொருட்டாகவே தெரிவதில்லை. தி.மு.க. தலைவரும் முதல் அமைச்சருமான மு.க.ஸ்டாலினுக்கு, இப்போது வங்கதேச இந்துக்களுக்காக குரல் கொடுக்க மனமில்லை. காங்கிரஸ்,

தி.மு.க. கம்யூனிஸ்ட்டுகள் உள்ளிட்ட 'இந்தியா' கூட்டணி கட்சிகளின் இரட்டை நிலைப்பாட்டை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஒரு கண்ணுக்கு வெண்ணெய், மற்றொரு கண்ணுக்கு சுண்ணாம்பு வைப்பது தான் 'இந்தியா' கூட்டணி கட்சிகளின்பாரம்பரியம்." இவ்வாறு வானதி சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

# திருக்குறளை தேசிய அறநூலாக அறிவிக்க கோரிய மனு தள்ளுபடி



மதுரை, ஆக. 9

தூத்துக்குடி மாவட்டம், கடம்பூரை சேர்ந்த செல்வகுமார் ஐகோர்ட் மதுரை கிளையில் தாக்கல் செய்த மனுவில், இந்தியாவின் தேசிய அறநூலாக திருக்குறளை அறிவித்து, திருக்குறளின் பெருமைகளை உலக மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். இதற்காக திருக்குறளை அறநூலாக அறிவிக்க ஐகோர்ட் மதுரை கிளை உத்தரவிட வேண்டும் என கூறியிருந்தார். இந்த மனு நேற்று நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன், எல்.விக்டோரியா கவுரி ஆகியோர் முன் விசாரணைக்கு வந்தது.

மனுவை விசாரித்த நீதிபதிகள், திருக்குறளை இந்திய தேசிய அறநூலாக எப்படி அறிவிக்க முடியும்? அவ்வாறு செய்தால் அனைவரும் மாநில நூல்களை தேசியநூலாக அறிவிக்க வேண்டும் என ஐகோர்ட்டை தேடி வருவார்கள்.

திருக்குறள் என்பது அனைவருக்கும் பொதுவான கருத்தினை சொல்லும் ஒரு நூல் மட்டுமே. அதன்படி வாழ்க்கை நெறிமுறைகளை கடைபிடிப்பது அவரவர்களின் விருப்பம். எனவே திருக்குறளை தேசிய நூலாக அறிவிப்பு செய்வது தேவையற்றது. இந்த மனு முடித்து வைக்கப்படுகிறது என உத்தரவிட்டனர்.

# சென்னையில் மருத்துவக்கட்டிடம் திறந்து வைத்து, மருத்துவ உபகரணங்களை வழங்கி, புதிய மருத்துவக்கட்டிடத்திற்கு அமைச்சர் உதயநிதி அடிக்கல் நாட்டினார்




சென்னை, ஆக. 9

இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சென்னை, அரசு கஸ்தூரிபாய் காந்தி தாய்சேய் நல மருத்துவமனை மற்றும் இராயப்பேட்டை அரசு பொதுமருத்துவமனையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் மருத்துவக்கட்டிடம் திறந்து வைத்து, மருத்துவ உபகரணங்களை வழங்கி, புதிய மருத்துவக்கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

அரசு கஸ்தூரிபாய் காந்தி தாய்சேய் நல மருத்துவமனை202021 நிதி நிலை அறிக்கையில் அறிவித்த அறிவிப்பின்படி, ரூ.6.17 கோடி மதிப்பீட்டில் 4ஆம் தளம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் அறுவை சிகிச்சை அரங்கம்,அறுவைசிகிச்சைக்குப்பின் கண்காணிப்பு அறை,அதிதீவிரசிகிச்சை பிரிவு, தீவிர சிகிச்சைப் பிரிவு ஆகியவை 25,000 சதுர அடியில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. இந்த நிகழ்வில் இன்போசிஸ் நிறுவனம் CSR நிதியின்கீழ் ரூ.30 கோடி மதிப்பில் மருத்துவ உபகரணங்கள் வழங்கியுள்ளது. அதில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் மருத்துவ உபகணரங்கள் அரசு கஸ்தூரிபாய் காந்தி தாய்சேய் நல மருத்துவமனைக்கும், ரூ.10 கோடி மதிப்பீட்டிலான மருத்துவ உபகரணங்கள் சென்னை, இராஜீவ்காந்தி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கும் வழங்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

கலைஞர் நூற்றாண்டு பன்னாட்டு மாரத்தான் – 2023 இராயப்பேட்டை அரசு பொது மருத்துவமனையில் ரூ.40.05 கோடி மதிப்பீட்டில் மருத்துவ உபகரணங்களுடன் கூடிய புதிய 100 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சை பிரிவு கட்டிடம் தரைதளம் மற்றும் இரண்டு மாடிகள் கொண்டவை 62,700 சதுர அடி பரப்பில் கட்டுவதற்காக அடிக்கல் நாட்டப்பட்டது. முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு பன்னாட்டு மாரத்தான்2023 மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சீரிய முயற்சியின் காரணமாக கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6ந் தேதி நடைபெற்று 73,000த்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு கின்னஸ் சாதனையாக உருபெற்றது.

இந்நிகழ்ச்சியின் மூலம் கிடைத்த பதிவுத்தொகை ரூ.3,42,50,000 மற்றும் அரசு பங்களிப்பு நிதியாக நமக்குநாமே திட்டத்தின் மூலம் ரூ.6,85,00,000 மொத்தம் ரூ.10.27 கோடி மதிப்பீட்டில் உயர்தர புற்றுநோய் சிகிச்சை மையம் தரைத்தளம் மற்றும் இரண்டு மாடிகள் கொண்டு 62,700 சதுர அடி பரப்பளவில் தரைத்தளத்தில் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடம், கதிரியக்க நோய் கண்டறிதல் பிரிவு, முதல் தளத்தில் உள்நோயாளிகள் பிரிவு, இரண்டாம் தளத்தில் நவீன வசதிகள் கொண்ட அறுவை சிகிச்சை அரங்கங்கள், அறுவை சிகிச்சைக்கு முந்தைய அறை, மீட்பு அறை, தீவிர சிகிச்சை பிரிவு போன்ற வசதிகளுடன் கட்டிடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.ப்ரியா, மத்தியசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஜெ.சங்குமணி, சென்னை மருத்துவமனைக்கல்லூரி முதல்வர் மரு.தேரணிராஜன், பெருநகர சென்னை மாநகராட்சி மதிப்பிற்குரிய துணைமேயர் மு.மகேஷ் குமார், சென்னை பெருநகர மாநகராட்சி பணிகள் நிலைக்குழுத் தலைவர் நே.சிற்றரசு, மண்டலக்குழுத்தலைவர் எஸ். மதன்மோகன், அரசு கஸ்தூரிபாய் காந்தி மகளிர் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனை இயக்குநர் (பொ) மரு.சுமதி, இன்போசிஸ் நிர்வாகிகள் உமாதேவி, சூர்யா, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக்குழுத்தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மருத்துவர்கள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திருவள்ளுவரை இந்தியாவின் ஆன்மீக குருவாக அறிவிக்கக் கோரி ஐகோர்ட்டில் வழக்கு



சென்னை, ஆக. 9

டெல்லியில் உள்ள புதிய நாடாளுமன்ற கட்டிடத்தில் திருவள்ளுவர் சிலையை அமைக்க வேண்டும் என்றும், திருவள்ளுவரை இந்தியாவின் ஆன்மீக குருவாக அறிவிக்க உத்தரவிட வேண்டும் என்றும் கோரி சென்னை ஐகோர்ட்டில் செல்வகுமார் என்பவர் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு இன்று விசாரணைக்கு வந்த போது, இந்தியாவில் உள்ள பிற மாநில ஐகோர்ட்டுகளிலும் இதேபோன்ற கோரிக்கைகளுடன் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டால் என்னவாகும்? என நீதிபதிகள் கேள்வி எழுப்பினர். இது போன்ற மனுக்களை ஊக்குவிக்க இயலாதுஎனகுறிப்பிட்ட நீதிபதிகள், வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

# மாஞ்சோலை விவகாரம் தொடர்பாக மனித உரிமை ஆணையத்திடம் புகார்



நெல்லை, ஆக. 11

மாஞ்சோலை விவகாரம் தொடர்பாக மனித உரிமை ஆணையத்திடம் புகார் அளிக்கப்பட்டது.

நெல்லை மாவட்டம் மாஞ்சோலை மலை கிராமங்களில் உள்ள தேயிலைத் தோட்ட நிறுவனங்களின் ஒப்பந்த காலம் விரைவில் முடிவடையுள்ள நிலையில், அங்கு பணியாற்றும்தேயிலை தோட்ட தொழிலாளர்களை விருப்ப ஓய்வு கொடுத்து வெளியேற்றும் முயற்சி நடந்து வருகிறது.

இது தொடர்பான வழக்கு மதுரை ஐகோர்ட்டு கிளையில் நிலுவையில் உள்ளது. இந்நிலையில், முத்துராமன் என்பவர் கடந்த ஜூலை 8ந்தேதி, மாஞ்சோலை விவகாரம் தொடர்பாக தேசிய மனித உரிமை ஆணையத்திற்கு புகார் ஒன்றை அனுப்பி இருந்தார்.

அதில் நீண்ட காலமாக வனப்பகுதியில் வசிக்கும் 700 குடும்பங்களை கட்டாயப்படுத்தி வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகள் நடந்து வருவதாக குறிப்பிட்டிருந்தார்.

இந்த வழக்கு தொடர்பாக தேசிய மனித உரிமை ஆணையம் விசாரணை மேற்கொண்டது. அதன் அடிப்படையில் நெல்லை மாவட்ட கலெக்டர் இந்த விவகாரம் தொடர்பான உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தல்கள் வழங்கி இந்த வழக்கை மனித உரிமை ஆணையம் முடித்து வைத்தது.

# எனக்கு சினிமாவிலும் வாழ்க்கையிலும் அவர்தான் காட்பாதர் துருவா சர்ஜா



அர்ஜுன் கதை திரைக்கதை எழுதியுள்ள படம் மார்டின். படத்தின் கதாநாயகனாக பிரபல கன்னட நடிகர் துருவாசர்ஜாநடித்துள்ளார். இவர்அர்ஜுனின்சகோதரி மகன். நாயகியாக அன்வேஷி ஜெயின் நடித்துள்ளார். ஏ.பி.அர்ஜுன் படத்தை இயக்கியுள்ளார். ரவி பஸ்ரு இசையமைத்துள்ளார்.

முற்றிலும் ஹாலிவுட் தரத்தில் உருவாக்கப்பட்டுள்ள இந்த படம் இந்தியாவில் மட்டும் இன்றி வெளிநாடுகளிலும் அந்தந்த மொழிகளில் திரைக்கு வர இருக்கிறது. தமிழ், இந்தி, தெலுங்கு, கன்னடம், மலையாளம் மற்றும் பெங்காலி, ஜப்பான், சீனா அரபு, கொரியா என 13 மொழிகளில் வருகிற அக்டோபர் 11 ஆம் தேதி வெளியாக இருக்கிறது.

இந்திய தேசப்பற்றை மையமாக கொண்டு உருவாக்கப்பட்ட இந்தப் படத்தில் துருவா சர்ஜாவின் ஆக்சன் காட்சிகள் உலக தரத்தில் அமைந்துள்ளது. இப்படத்தின் டிரைலர் வெளியீட்டு விழா மும்பையில் நடைபெற்றது.

இதில் துருவா சர்ஜா பேசும்போது, எனது அங்கிள் அர்ஜுன் இயக்கத்தில் நடிக்க ஆவலாக இருக்கிறேன். அவர் சம்மதம் சொன்னால் உடனே நடிக்க தயார். எனக்கு சினிமாவிலும் வாழ்க்கையிலும் அவர்தான் காட்பாதர் என்று கூறினார்.

அதிரடி சண்டை காட்சிகளுடன் வெளியாகி உள்ள மார்ட்டின் டிரெய்லர் ரசிகர்களை கவர்ந்துள்ளது.

# ராம் சரணின் "கேம் சேஞ்சர்" புது அப்டேட் வெளியீடு



தெலுங்கு திரையுலகில் முன்னணி நடிகர் ராம் சரண். இவர் இயக்குநர் ஷங்கர் இயக்கத்தில் உருவாகும் கேம் சேஞ்சர் என்ற படத்தில் நடித்து வருகிறார். இயக்குநர் கார்த்தி சுப்பராஜ் இப்படத்திற்கு கதையை எழுதியுள்ளார்.

இப்படத்தில் கியாரா அத்வானி, அஞ்சலி, எஸ்.ஜே. சூர்யா, சமுத்திரகனி, நாசர் மற்றும் பலர் முன்னணி கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். தமன் இந்த படத்திற்கு இசையமைக்க, ஒளிப்பதிவு பணிகளை திருநாவுக்கரசு மேற்கொள்ளகிறார். தில் ராஜூ தயாரித்துள்ள கேம் சேஞ்சர்திரைப்படம் வருகிற டிசம்பர்மாதம் வெளியாக இருக்கிறது.

இந்த நிலையில், கேம் சேஞ்சர் படத்தின் புது அப்டேட் தற்போது வெளியாகி உள்ளது. ஏற்கனவே இந்த படத்தின் படப்பிடிப்பு நிறைவுபெற்ற நிலையில், தற்போது படத்திற்கான டப்பிங் பணிகள் துவங்கி இருப்பதாக படக்குழு அறிவித்துள்ளது. சில மாதங்களுக்கு முன் கேம் சேஞ்சர் படத்தின் "ஜரகண்டி" என்ற பாடலை படக்குழு வெளியிட்டது. இப்பாடல் மக்களிடயே நல்ல வரவேற்பை பெற்றது. அடுத்தடுத்து இந்த படத்தின் அப்டேட்கள் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# பிரபல நடிகையின் மகள் திடீர் உயிரிழப்பு.. அதிர்ச்சியில் ரசிகர்கள்

பிரபல பாலிவுட் நடிகை திவ்யா சேத். பனேகி ஆப்னி பாட், ஹம் லோக், தில் ததக்னே தோ என பல்வேறு பிரபல திரைப்படங்களில் நடித்துள்ளார். திரைப்படங்கள் மட்டுமின்றி தொலைகாட்சி தொடர்கள், இணைய தொடர் உள்ளிட்டவைகளிலும் நடித்து வருகிறார்.

இவரது மகள் மிஹிகா ஷா உயிரிழந்துள்ளார். இது பற்றிய தகவலை திவ்யா சேத் பேஸ்புக் பதிவில் தெரிவித்தார். உயிரிழப்பு பற்றி மட்டும் அறிவித்த திவ்யா சேத், தனது மகள் உயிரிழக்க என்ன காரணம் என்பது பற்றி எந்த தகவலும் வழங்கவில்லை.

இது குறித்து வெளியான தகவல்களின் படி மிஹிகா ஷா காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சிகிச்சை எடுத்துக் கொண்டதாகவும், அதன் பிறகு அவரது உடல்நிலை நலிவுற்று உயிரிழந்ததாகவும் கூறப்படுகிறது.

நடிகை திவ்யா சேத் பிரபல நடிகை சுஷ்மா சேத்இன் மகள் ஆவார். இவர் பாலிவுட்டில் பல பெரிய நட்சத்திரங்களுக்கு அம்மாவாக நடித்துள்ளார்.

# 24 வருட காத்திருப்பு.. விக்ரமை சந்தித்த காந்தாரா நாயகன் ரிஷப் ஷெட்டியின் நெகிழ்ச்சிப் பதிவு



பா.ரஞ்சித் இயக்கத்தில் விக்ரம் நடிப்பில் உருவாகியிருக்கும் தங்கலான் படம் வரும் ஆகஸ்ட் 15 சுதந்திர தினத்தன்று வெளியாக உள்ளது. ஜி.வி. பிரகாஷ் குமார் இசையமைத்துள்ள தங்கலான் படத்தின் இசைவெளியீட்டு விழா நேற்று முன்தினம் பிரமாண்டமாக நடந்து முடிந்தது.

இதற்கிடையில் படத்தின் ப்ரோமோஷன் பணிகளில் விக்ரம் பிசியாக இயங்கி வருகிறார். தமிழ் சினிமாவில் குரல் கலைஞனாகத் தனது பயணத்தைத் தொடங்கிய விக்ரம், அசாதாரண நடிப்பாலும், தனித்துவமான குரலாலும் மக்களை வெகுவாகக் கவர்ந்தார். பாலா இயக்கத்தில் நடித்த சேது படம் விக்ரமிற்கு பிரேக்கிங் பாயிண்டாக அமைந்தது.

தொடர்ந்து ஆக்ஷன் ஹீரோவாக தூள், ஜெமினி என கலக்கிய விக்ரம், ரியலிஸ்டிக் ஹீரோவாக பிதாமகன், காசி உள்ளிட்ட படங்களின் ஊடாகவும் தனது நடிப்புத் திறமையை பட்டை தீட்டிக் கொண்டார்.

இந்தநிலையில் தற்போது, விக்ரமை சந்தித்துள்ள கன்னட திரையுலகின் வளர்ந்து வரும் சூப்பர் ஸ்டார், இயக்குனர், காந்தாரா நாயகன் ரிஷப் ஷெட்டி, தனது சமூக வலைதள பக்கத்தில் அவருடன் எடுத்த புகைப்படங்களை பகிர்ந்து அவர் குறித்து மனம் திறந்துள்ளார்.

அவரது பதிவில், நடிகனாக உருவாவதற்கான எனது பயணத்தில் விக்ரம் சார் எனக்கு எப்போதும் பெரிய இன்ஷ்பிரேஷன், 24 ஆண்டுகள் கழித்து எனது ஹீரோவை நேரில் சந்தித்தது உலகின் மிகவும் அதிஷ்டசாலியான மனிதனாக என்னை உணர வைக்கிறது. என்னைப்போன்ற நடிகர்களுக்கு உந்துசக்தியாக இருப்பதற்கு மிகவும் நன்றி, தங்கலான் படத்துக்கு எனது வாழ்த்துக்கள் . லவ் யூ என்று தெரிவித்துள்ளார்.

# ரஞ்சித்தின் மிகப்பெரிய கனவு படைப்பு தங்கலான் ஜீ. வி பிரகாஷ்



சீயான் விக்ரம் கதையின் நாயகனாக நடித்திருக்கும் 'தங்கலான்' படத்தின் இசை வெளியீடு சென்னையில் பிரமாண்டமாக நடைபெற்றது.

இதில் இசையமைப்பாளர் ஜீ. வி பிரகாஷ் பேசுகையில், ''இந்தத் திரைப்படத்தில் அனைவரும் கடினமாக உழைத்து இருக்கிறார்கள். அவர்களுடன் நானும் இணைந்து ஒரு சிறிய அளவில் உழைத்திருக்கிறேன். பழங்குடி இன மக்களின் வாழ்க்கையையும், அவர்களின் இசையையும் நேர்மையாக பதிவு செய்ய முயற்சி செய்திருக்கிறேன். என்னுடைய சிறப்பான பங்களிப்பை வழங்கி இருக்கிறேன். ரசிகர்களாகிய நீங்கள் பாருங்கள். கேளுங்கள்.



தயாரிப்பாளர் ஞானவேல் ராஜா இயக்குநர் பா. ரஞ்சித் நடிகர் விக்ரம் ஆகியோருக்கு இந்த தருணத்தில் நன்றியை தெரிவித்து கொள்கிறேன். ஏனெனில் அவர்கள் கொடுத்த இந்த வாய்ப்பினை நான் சிறப்பாக பயன்படுத்தி முயற்சி செய்திருக்கிறேன். விக்ரமுடன் 'தெய்வத்திருமகள்', 'தாண்டவம்' ஆகிய படங்களை தொடர்ந்து, 'தங்கலான்' படத்தில் இணைந்திருக்கிறேன்.

இயக்குநர் பா. ரஞ்சித்தின் மிகப்பெரிய கனவு படைப்பு இது. இதில் என்னையும் இணைத்துக் கொண்டதற்கு அவருக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

ஞானவேல் ராஜா அவருடன் இணைந்து ஏராளமான படங்களில் பணியாற்றி இருக்கிறேன். இந்த படம் அவருக்கு சிறந்த தங்கமாக அமையும். இந்தத் திரைப்படம் இந்த ஆண்டின் மிகப்பெரிய வெற்றிப்படமாக அமைய வேண்டும் என இறைவனை பிரார்த்திக்கிறேன். '' என்றார்.

# வினேஷ் போகத் தகுதி நீக்கம் நடந்தது என்ன?



ஒலிம்பிக் விளையாட்டு தொடர் பிரான்ஸ் தலைநகர் பாரீசில் நடைபெற்று வருகிறது. இதில், மல்யுத்தம் பெண்கள் 50 கிலோ எடை பிரிவுக்கான அரையிறுதி போட்டியில், இந்திய வீராங்கனை வினேஷ் போகத், கியூபா வீராங்கனை யூஸ்னிலிஸ் குஸ்மானை 50 என்ற புள்ளி கணக்கில் வீழ்த்தி அபார வெற்றிபெற்றார்.

அவர் இன்று இறுதி போட்டியில் மோதயிருந்த நிலையில் 100 கிராம் எடை கூடுதலாக இருக்கும் காரணத்தை சுட்டிக்காட்டி தகுதிநீக்கம் செய்யப்பட்டார். இது ரசிகர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. மேலும் வினேஷ் போகத்துக்கு அனைவரும் தற்போது ஆறுதல் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் அவர் தகுதிநீக்கம் செய்யப்பட்டத்தற்கான காரணம் குறித்து சில தகவல்கள் வெளியாகி உள்ளது.


நிர்ணயிக்கப்பட்ட எடையை விட அதிகமாக இருந்தால் தகுதி நீக்கம் செய்யப்படுவார்கள். வினேஷ் போகத் பொதுவாக 53 கிலோ எடைப்பிரிவில் கலந்து கொள்பவர். இந்த முறை பாரிஸ் ஒலிம்பிக்கில் 50 கிலோ எடைப் பிரிவில் கலந்து கொண்டார். மல்யுத்த போட்டியின் முதல் நாள் காலையில் மருத்துவ பரிசோதனை மற்றும் எடை பரிசோதனை நடத்தப்படும்.

2வது நாள் காலையில் எடை பரிசோதனை நடத்தப்படும். எடை பரிசோதனையின் போது singlet வகை இறுக்கமான ஆடையை தான் அணிந்திருக்க வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட எடையை விட அதிகமாக இருந்தால் தகுதி நீக்கம் செய்யப்படுவார்கள். மருத்துவ பரிசோதனையில் நோய் தொற்று கண்டறியப்பட்டால் போட்டியில் பங்கேற்க முடியாது. நகம் உள்ளிட்டவை நீளமாக வைத்திருக்க கூடாது.

அரையிறுதி போட்டி முடிந்த பிறகு வினேஷ் போகத் 1 கிலோ வரை அதிகமாக இருந்ததாக தெரிகிறது. எடையைக் குறைக்க உறங்காமல் இரவு முழுவதும் வினேஷ் போகத் ஸ்கிப்பிங் உள்ளிட்ட work out மேற்கொண்டு உள்ளார். உணவையும் தவிர்த்துள்ளார். ஆனால் எடை பரிசோதனையில் வினேஷ் போகத் 100 கிராம் அளவு அதிக எடை இருந்து இருக்கிறார்.

இந்திய ஒலிம்பிக் கமிட்டி வினேஸின் எடையைக் குறைக்க அவகாசம் கேட்டதாகவும் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி அதை நிராகரித்ததாகவும் கூறப்படுகிறது. எடையை குறைப்பதற்கு வினேஷ் போகத் தலை முடி வெட்டப்பட்டதாகவும், உடலில் இருந்து ரத்தம் வெளியேற்றப்பட்டதாகவும் கூறப்படுகிறது. பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டும் வினேஷ் போகத் எடையை 50 கிலோவாக குறைக்க முடியாமல் போயுள்ளது.

# வினேஷ் போகத் தகுதி நீக்கம்: வீடியோ வெளியிட்டு பி.டி. உஷா விளக்கம்



இதில், நேற்றிரவு நடைபெற்ற மல்யுத்தம் பெண்கள் 50 கிலோ எடைப் பிரிவுக்கான அரையிறுதி போட்டியில், இந்திய வீராங்கனை வினேஷ் போகத், கியூபா வீராங்கனை குஸ்மானை வீழ்த்தி இறுதிசுற்றுக்கு தகுதி பெற்றார்.

இறுதிப் போட்டியில் இந்திய வீராங்கனை வினேஷ் போகத் அமெரிக்காவை சேர்ந்த சாரா ஹில்டெப்ரண்ட்ஐ எதிர்கொள்ள இருந்தார். இந்த நிலையில், வினேஷ் போகத் உடல் எடை சில கிராம்கள் வரை கூடி இருப்பதால் அவர் தகுதி நீக்கம் செய்யப்பட்டதாக ஒலிம்பிக் கமிட்டி அறிவித்துள்ளது.

இந்நிலையில் வினேஷ் போகத் தகுதி நீக்கம் செய்யப்பட்டது குறித்து இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் தலைவர் பி.டி. உஷா விளக்கம் அளித்து வீடியோ வெளியிட்டுள்ளார்.

அதில், "வினேஷ் போகத்தின் தகுதி நீக்கம் மிகவும் அதிர்ச்சியளிக்கிறது. ஒலிம்பிக் வில்லேஜ் கிளினிக்கில் அனுமதிக்கப்பட்டுள்ள போகத்தை சந்தித்து பேசினேன். இந்திய ஒலிம்பிக் சங்கமும் இந்திய அரசாங்கமும் அவளுக்கு முழுமையான ஆதரவை வழங்குவதாக உறுதியளித்தேன். நாங்கள் வினேஷ் போகத்திற்கு அனைத்து மருத்துவ மற்றும் உளவியல் ஆதரவை வழங்குகிறோம்.

வினேஷ் போகத்தின் தகுதி நீக்கத்திற்கு எதிராக இந்திய ஒலிம்பிக் சம்மேளனம் முறையீடு செய்துள்ளது" என்று அவர் தெரிவித்தார்.

# டேபிள் டென்னிஸ்: இந்திய பெண்கள் அணி காலிறுதியில் தோல்வி




பாரீஸ் ஒலிம்பிக் டேபிள் டென்னிஸ் பெண்கள் அணிகள் பிரிவில் இந்தியா ஜெர்மனியை எதிர்கொண்டது.

முதல் மேட்சில் ஸ்ரீஜா அகுலா அர்ச்சனா கிரிஷ் கமத் ஜோடி ஜெர்மனியின் ஜியாவோனா ஷான் யுயன் வான் ஜோடியை எதிர்கொண்டது. இதில் இந்திய ஜோடி 13 எனத் தோல்வியடைந்தது.

2வது மேட்சில் மணிகா பத்ரா ஜெர்மனியின் அன்னெத் கவ்மான் மோதினார்கள். இதில் மணிகா பத்ரா 13 எனத் தோல்வியடைந்தார்.

3வது மேட்சில் அர்ச்சனா கிரிஷ் கமத் ஜியாவோனா ஜோடி விளையாடியது. இதில் அர்ச்சனா 31 என வெற்றி பெற்றார்.

4வது போட்டியில் ஸ்ரீஜா அகுலா அன்னெட் கவ்மான் பலப்பரீட்சை நடத்தினர். இதில் ஸ்ரீஜா 03 எனத் தோல்வியடைந்தார். இதனால் இந்தியா 13 எனத் தோல்வியடைந்து வெளியேறியது.

தடகளத்தில் பெண்களுக்கான 100 மீட்டர் தடை ஓட்டம் தகுதிச் சுற்றில் இந்திய வீராங்கனை ஜோதி யர்ராஜி ஏமாற்றம் அடைந்தார்.

# உயரம் தாண்டுதல் போட்டியில் இறுதி சுற்று வாய்ப்பை இழந்தார் சர்வேஷ் குசாரே



பாரீஸ் ஒலிம்பிக் தடகளம் போட்டியில் ஆண்களுக்கான உயரம் தாண்டுதல் போட்டியின் தகுதிச் சுற்று இந்திய நேரப்படி இன்று மதியம் நடைபெற்றது. மொத்தம் 31 பேர் தகுதிச் சுற்றில் கலந்து கொண்டர். "ஏ" பிரிவில் 15 பேரும், "பி" பிரிவில் 16 பேரும் கலந்து கொண்டர்.

"பி" பிரிவில் இந்தியாவின் சர்வேஷ் அணில் குஷாரே கலந்து கொண்டார். ஒவ்வொரு வீரரும் நான்கு முறை உயரம் தாண்ட வேண்டும். நான்கில் எது சிறந்த தாண்டுதலோ அது தகுதியாக எடுத்துக் கொள்ளப்படும்.

இறுதிச் சுற்றுக்கு தகுதியான உயரம் 2.29 மீட்டர். இந்த தூரத்தை எட்டிவிட்டால் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்று விடலாம். இல்லையெனில் இரண்டு பிரிவிலும் இருந்து சிறந்த 12 பேர் இறுதிப் போட்டிக்கு முன்னேறுவார்கள்.

சர்வேஷ் அணில் குஷாரே இரண்டு முயற்சிகளில் ஒன்றில் 2.15 மீட்டர் தூரம் தாண்டினார். இதனால் குஷாரே 13வது இடம் பிடித்து ஏமாற்றம் அடைந்தார். "பி" பிரிவில் அதிகபட்சமாக நியூசிலாந்து வீரர் ஹமிஸ் கெர் 2.27 மீட்டர் தாண்டினார். பி பிரிவில் ஐந்து பேரும், "ஏ" பிரிவில் ஏழு பேரும் என மொத்தம் 12 பேர் இறுதிச் சுற்றுக்கு முன்னேறினார்.



ஈத லிசைபட வாழ்தல் அதுவல்ல
தூதிய மில்லை உயிர்க்கு

விளக்கம்:

வறியவர்க்கு ஈதல் வேண்டும் அதனால்புகழ்உண்டாகவாழவேண்டும், அப் புகழ் அல்லாமல் உயிர்க்கு ஊதியமானது வேறொன்றும் இல்லை.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.